**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No.34 of 2020

Deposition of witness for { Prosecution PW 7
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | விநாயகமூர்த்தி |
| Father Name | : | வீரபுத்திரன் |
| Village | : | சங்கரலிங்கபுரம் |
| Taluk | : | விருதுநகர் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision s of Act X of 1873 of the 05th day of November 2025.

எதிரிகள் ஆஜர்.

<u>**முதல் விசாரணை -**</u>

நான் தற்போது சங்கரலிங்கபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்பட்டும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். நான் ஆரிய நிவாஸ் ஹோட்டலில் வேலை பார்த்தேன். அதன் மேலாளர் கேட்டதற்கு இணங்க ஹோட்டலில் கையெழுத்து செய்தேன். மேற்படி பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.4** ஆகும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை )**

கடந்த 07.05.2019ம் இரவு சுமார் 11.30 மணிக்கு நானும் ஆரிய நிவாஸ் ஹோட்டலில் வேலை செய்யும் சபரி சுந்தரம் என்பவரும் ஆரிய நிவாஸ் ஹோட்டல் முன்பு நின்று பேசி கொண்டிருந்தபோது விருதுநகர் மேற்கு காவல்

நிலையம் பொறுப்பு சூலக்கரை காவல் ஆய்வாளர் அவர்கள் சூலக்கரை காவல் நிலைய குற்ற எண்.145/2019 பிரிவு 392.இ.த.ச வழக்கின் சம்பவ இடமான ஆரிய நிவாஸ் ஹோட்டலுக்கு பின்புறம் புதியதாக கட்டி வரும் ஆஸ்பத்திரி அருகில் அமைந்த சம்பவ இடத்தை எங்கள் முன்னிலையில் சார்ஜர் லைட், டார்ச்லைட், தெருவிளக்கு வெளிச்சம் வாகன லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார் என்றும், அதில் நான் மற்றும் சபரி சுந்தரம் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – **இல்லை.**